பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 24 வியாழக்கிழமை (06-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 71

# வவுனியாவில் இருந்து படை இரண்டு முனைகளில் நகர்வு

## மேற்கே மன்னார் நோக்கியும் வடக்கே ஓமந்தை நோக்கியும்

கொழும்பு, பெப்ரவரி 6

இலங்கையின் சுதந்திர தினமான நேற்று முன்தினம் வவுனியாவிலிருந்து புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ள ஸ்ரீலங்காப் படைகள் மேற்கில் மன்னாரை நோக்கியும், வடக்கில் ஓமந்தையை நோக்கியும் இரண்டு முனைகளில் நகர முயற்சிப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலுக்கு முன்னேற்பாடாக இராணுவ வாகனங்கள், யுத்த டாங்கிகள், புல்டோஸர்கள், அம்புலன்ஸ் என பல வண்டி, வாகனங்கள் பெரும் எண்ணிக்கையில் சில தினங்களுக்கு முன்னரே வவுனியா நகருக்குக் கொண்டுவரப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்த டாங்கிகள் பீரங்கிகள் முழங்க, கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தியவாறு காலாட்படைகள் முன்னோக்கி நகர்வதாகவும் —

அவற்றுக்குப் பாதுகாப்பாக இனங்காணப்பட்ட இலக்குகளை நோக்கி விமானப்படை விமானங்கள், ஹெலிகள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்துவதாகவும் —

இத்தாக்குதல் நடவடிக்கைகளை ஒட்டி மேற்குக் கடலில் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் கடற்படையின் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் இத்தாக்குதல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நடவடிக்கையில் 20 ஆயிரம் துருப்புகள்?

வன்னியில் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும்இராணுவ நடவடிக்கைக்கு 'எடிபல' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையில் சுமார் இருபதாயிரம் படையினர் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-4-10)

## அர்ஜுனா ரணதுங்கவை மேயராக நிறுத்தவும் முயற்சி!

கொழும்பு, பெப். 6

கொழும்பு மாநகர சபையின் மேயர் பதவிக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளராக இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் அர்ஜுனா ரணதுங்கவை நிறுத்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முடிவு செய்திருந்தது பற்றிய தகவல் தற்சமயம் வெளிவந்துள்ளது.

இந்த விடயத்தில் அர்ஜுனா ரணதுங்க அக்கறையில்லாமல் இருந்ததால் அந்த முயற்சி கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அர்ஜுனா ரணதுங்கவின் தந்தையார் ரெஜி ரணதுங்க, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் பிரதியமைச்சராக இருப்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் தேர்தலில் இம்ரான்கானுக்கு ஏற்பட்ட நிலை ஏற்படாமல் அர்ஜுனா ரணதுங்க தப்பிவிட்டார் என்று அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(உ-3-150)

## கண்டி சுதந்திரதின நிகழ்வில் பிக்குகள் பங்குபற்றவில்லை

கொழும்பு, பெப். 6

கண்டி அஸ்கிரிய பொலீஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த சுதந்திர தின விழா நிகழ்ச்சிகளில் — அனுசாசன உரை வழங்கக்கூட — பிக்குமார் ஒருவரும் சமுகமளிக்கவில்லை என்று மத்திய மாகாண முதலமைச்சர் எம். வி. திஸநாயக்க தெரிவித்திருக்கின்றார்.

பிரஸ்தாப சுதந்திர தின நிகழ்வுக்கு அஸ்கிரிய, மல்வத்தை மகாநாயக்கர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அஸ்கிரிய பீடாதிபதி, சுகவீனம் என்று காரணங்காட்டி வைபவத்திற்கு சமுகமளிக்கவில்லை.

மல்வத்தை பீடாதிபதி, தமக்குப் பாரம்பரிய — சம்பிரதாய — முறைப்படி அழைப்பு கையளிக்கப்படவில்லை என்று கூறியுள்ளார்.

ஒரேயொரு பிக்குமட்டும் இந்த வைபவத்துக்கு வந்தார். இந்தியாவில் இருந்து உல்லாசப் பயணியாக வந்தி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச தொண்டா விருப்பம்

### ஜனாதிபதி அனுமதி வழங்குவாரா?

கொழும்பு, பெப். 6

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, அரசாங்கத்தின் சார்பில், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அமைச்சர் தொண்டமான் விருப்பம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டி. எம். ஜயரத்னா இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

அமைச்சர் டி. எம். ஜயரத்னா தலைமையிலான பொது மக்கள் ஐக்கிய முன்னணிக் குழுவுக்கும், அமைச்சர் தொண்டமான் தலைமையிலான இ. தொ. கா. குழுவுக்கும் இடையில் உள்ளூராட்சித் தேர்தல் பற்றிய பேச்சுக்கள் அண்மையில் நடைபெற்றன.

அப்போதே யுத்தத்தை

(8ஆம் பக்கம் பார்க்க)

## 10 ஆயிரம் மெற்றிக் தொன் தரக் குறைவான பெற்றோல் இறக்குமதி

கொழும்பு, பெப். 6

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 10 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் தரக்குறைவானது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சப்புகஸ்கந்தையில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் திருத்த வேலைக்காக கடந்த மாதம் 15 ஆம் திகதி முதல் இம்மாதம் 15 ஆம் திகதி வரை மூடப்பட்டுள்ளது. இக்காலத்தில் பெற்றோலுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்ற காரணத்தால் 10 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் இறக்குமதி செய்யப்பட்டது.

கொழும்புத் துறைமுகத்தில் கப்பலில் இருந்து இந்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சுற்றிவந்து ஓமந்தையை பிடிப்பதே படையின் திட்டம்?

சுற்றிவந்து ஓமந்தையைக் கைப்பற்றுவதற்கு அரசுப் படைகள் திட்டமிட்டிருக்கக் கூடும்.

வவுனியாவிலிருந்து, ஆரம்பிக்கப்பட்டுள்ள 'எடிபல' இராணுவ நடவடிக்கை குறித்து பி. பி. ஸியின் சிங்கள சேவைக்கு கருத்து வெளியிடுகையில் 'யுக்திய' சிங்கள வார இதழின் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த எஸ். மனோரஞ்சன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

'எடிபல' இராணுவ நடவடிக்கையில் படைகள் முன்னேறி வருவதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ள போதிலும் நடவடிக்கைத் திட்டத்தைத் தற்போது மாற்றி அமைக்கவே நேர்ந்துள்ளது.

ஓமந்தைக்குத் தெற்கே உள்ள பிரதேசத்தில் மேற்கிலிருந்து கிழக்காக — அதாவது பிரதான வீதிக்குக் குறுக்காக — பல கிலோ மீற்றர் நீளத்திற்குப் பலம் வாய்ந்த காப்பகழிகளையும் அரண்களையும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் கடந்த சில வாரங்களாகப் புலிகள் அமைத்து வந்துள்ள

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளம் ஊடான போக்குவரத்து பாதிப்பு

வவுனியாவில் இருந்து நேற்று முன்தினம் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து வடக்கிற்கான — தாண்டிக்குளம் ஊடான — போக்குவரத்துக்கள் பாதிப்படைந்தன.

வவுனியாவில் இருந்து வடக்கே செல்வதற்கும், வடக்கில் இருந்து வவுனியாவுக்குள் செல்வதற்கும் நேற்று எவரும் அனுமதிக்கப்படவில்லை.

இதே நேரம் வடக்கிற்கான பொருள்களை எடுத்துச் செல்வதற்காக வவுனியாவுக்கு வந்த 30 லொறிகளை படையினர் தடுத்து வைத்துள்ளனர்.

அந்த லொறிகளின் சாரதிகளும், நடத்துனர்களும் வேப்பங்குளம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

(உ-3-4)

## முச்சந்தி முரளி




உது...... யாழ்ப்பாணத்து [illegible] ளுக்கு [illegible] இருக்கும் கண்டியளோ...!

## தேர்தலில் ரெலோ போட்டி: தமிழ்க் கட்சிகள் அதிருப்தி

கொழும்பு, பெப். 6

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ரெலோ அமைப்பு போட்டியிடுவது குறித்து ஏனைய தமிழ்க் கட்சிகள் அதிருப்தி கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

'ரெலோ' இத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து தமிழ்க் கட்சிகள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

''ரெலோ அமைப்பு இத் தேர்தலில் போட்டியிடுவதை எமது கட்சி ஆதரிக்கப்போவதில்லை'' என்றார் ஈரோஸ் செயலாளர் சுதாகரன்.

''ரெலோவை ஆதரிக்க முடியாது. இனப்பிரச்சினை விடயத்தில் இரு பிரதான கட்சிகளின் ஆதரவும் எமக்குத் தேவை'' — என்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார்.

''தேர்தலில் போட்டியிடுவது குறித்து ரெலோ எம்முடன் பேசவில்லை. ஐந்து கட்சிகளின் கூட்டமைப்புக் கூடும்போது இந்த விடயம் பற்றிப் பேசலாம் —'' என்று புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்தார்.

''ரெலோ தேர்தலில் போட்டியிடும் விடயம் தொடர்பாக கூட்டுக் கட்சிகள் கலந்துரையாட வேண்

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் செல்வன் ந. பத்மேந்திரனின்
அருமைத்தந்தை

**தம்பிஐயா நடராஜா**

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**A/L 97 வர்த்தக மாணவர்கள்**
**யாழ். மத்திய கல்லூரி.**

(45118)

## கண்ணீர் அஞ்சலி

எமது வகுப்பாசிரியை
**திருமதி ம. சுந்தரம்பிள்ளை**
அவர்களின் அருமை மகன்
**சு. மணிவண்ணன்** B A (Hons)

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தி அடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**ஆண்டு 11 பி மாணவர்கள்**
**யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரி.**

(9249)


**JAFFNA COLLEGE UNDERGRADUATE Dept.**
**464, HOSPITAL ROAD, JAFFNA.**

**COMPUTER CLASSES**

பின்வரும் வகுப்புகள்
**8-2-97 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு ஆரம்பமாகின்றன.**

1. **Diploma Courses:**
   Diploma in Computer Programming
   (One year full - time Course)
2. **Certificate Courses:**
   a) BASIC Language b) PASCAL Language
   c) d BASE III + d) LOTUS 1 2 3
3. **English Classes**
   (English Literature & BASIC English)

Note:
★ மாணவர்களின் வசதி கருதி யாழ்ப்பாணத்தில் எமது கிளை மீண்டும் சேவையைத் தொடங்க உள்ளது.
★ மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிகள் அனைத்தும் யாழ். பொது மருத்துவமனை முன்பாக உள்ள, யாழ்ப்பாணக் கல்லூரி, வெளிவாரிப் பட்டப்படிப்பு நிறுவனத்தில் நடைபெறும்.
★ மாணவர்களின் வசதிக்கேற்ப முழுநேர, பகுதி நேர பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

விபரங்களுக்கு:
**யாழ்ப்பாணக் கல்லூரி,**
**வெளிவாரிப் பட்டப்படிப்பு நிலையம்**
**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-72)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 27 — 12 — 1942

விண்ணில்; 24 — 12 — 1996

காளிகோயிலடி மல்லாகத்தைச் சேர்ந்த
அமரர்
**தம்பிப்பிள்ளை விக்கினேஸ்வரன்**
**(பிள்ளையார்)**

இன்று (06 - 02 - 97) அன்னாரின் தற்போதைய இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

உங்கள் பிரிவால் வாடும்;
மகள்: வி. றோகினி.

காளி கோயிலடி,
தாவடி வடக்கு.

(45129)

## ஆணைக்குழு நியமனம்

1964 ஆம் வருடத்தின் சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையை விட்டு வெளியேறிச் செல்லாத இந்திய இனத்தவர்களின் பிரச்சினைகளைக் கண்டறிவதற்காக ஓர் உறுப்பினர் ஆணைக்குழுவை அமைக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முடிவு செய்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவுக்கு ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர் தலைவராக இருப்பார். மூன்று மாதத்திற்குள் ஆணைக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

## வேட்புமனு தாக்கல்

தெற்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வது நேற்று ஆரம்பமானது. எதிர்வரும் 12ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)

## உயர்தர பரீட்சை முடிவுகள்

கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சையின் முடிவுகள் இம்மாதத்தின் கடைசி வாரத்தில் வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வழமையாக ஒகஸ்ட் மாதத்தில் நடைபெறும் இப்பரீட்சை கடந்த முறை செப்ரெம்பர் மாதத்தில் நடைபெற்றதும் —

விடைத் தாள்களைத் திருத்துவதற்கு பட்டதாரி ஆசிரியர்கள் விதித்த கெடுபிடிகளும் —

பரீட்சை முடிவுகளை வெளியிடக் காலதாமதமானதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## பொ.ஐ.மு.வின் தேர்தல் கோஷம்

கொழும்பு, பெப். 6

எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களின் போது ஐ.தே.க. ஆட்சியின் 17 வருட கால அரச பயங்கரவாதம், ஊழல் மோசடி, ஆயிரக்கணக்கான இளைஞர்களின் இறப்பு, அரச சொத்துக்களைக் குறைந்த விலைக்கு விற்றமை ஆகியவற்றை மக்கள் மறக்கவே மாட்டார்கள். இதுவே பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் கோஷமாக இருக்கும்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரும், அமைச்சருமான டி.எம். ஜயரத்தின மேற்கண்டவாறு தெரிவித்தார். [இ-3]

## கோழிகளுக்கு தடுப்பூசி

வலிகாமம்தெற்கு, பெப் 6

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் இரண்டாம் கட்டமாக விநியோகிக்கப்பட்ட இலவச கோழிக் குஞ்சுகளுக்கான கோழி அம்மை நோய்த் தடுப்பூசி பின்வரும் இடங்களில் சுன்னாகம் கால்நடை வைத்தியர் பிரிவினரால் வழங்கப்பட உள்ளன.

★ பெப்ரவரி 8 — சனிக்கிழமை:

சுன்னாகம் கால்நடை வைத்தியர் அலுவலகம், ஏழாலை பெரிய சங்கத்தடி, சூராவத்தை மணியம் கடையடி, ஏழாலை கிழக்கு றோமன் கத்தோலிக்க ஆலயம், புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயம்.

★ பெப்ரவரி 10 — திங்கட்கிழமை;

உடுவில் பிரதேச செயலகம், உடுவில் கற்பொக்கணை கலைமதி சன சமூக நிலையம், இணுவில் [illegible] இணுவில் மத்திய கல்லூரியடி.

(ஐ-152)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா விசாகப்பெருமாள் (தியாகு)

(முன்னாள் அச்சுக் கோர்ப்பாளர், விவேகானந்தா அச்சகம்)

நாயன்மார்கட்டைச் சேர்ந்த கந்தையா விசாகப்பெருமாள் (தியாகு, இராசு) 05 - 02 - 97 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தையா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு திருமதி ஐயாத்துரை (சோதிடர்) தம்பதிகளின் அன்பு மருமகனும், புஸ்பராசமணியின் அன்புக்கணவரும், சண்முகலிங்கம் (புடைவை வியாபாரம்), சந்திரகாந்தா, மலர்வாசம், இராசலிங்கம் (புடைவை வியாபாரம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அல்பிரேட்டின் அன்பு மாமனாரும், சண்முகதாஸின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சனகரெத்தினம். ருக்மணி மற்றும் அன்னரெத்தினம், கோமதி (வேவி) ஆகியோரின் அன்புச்சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (6-2-97) இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படுமென்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
வி. சண்முகலிங்கம் (மகன்)
வி. இராசலிங்கம் (மகன்)

343, நாவலர் வீதி,
இலுப்பையடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(45122)

### திருமதி சந்தியாப்பிள்ளை பிரான்சிஸ் அம்மா

உசன், மிருசுவிலைச் சேர்ந்த திருமதி சந்தியாப்பிள்ளை - பிரான்சிஸ் அம்மா 05 - 02 - 1997 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளையின் அன்பு மனைவியும், திருமதி மேரிகெலன், திரு சூசைமரியதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அமிர்தநாதர், திருமதி அ. சூசைமரியதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அமலநாதன், ஜெசநாதன், இன்பநாதன் (லண்டன்), புஸ்பநாதன் (லண்டன்), நவீனா, நவிதரன், நவில்சன், நவீனன், நவிராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தனு, லாவண்யா, டிலான், அனோஜன், தர்சிகா, தயான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 06 - 02 - 1997 இன்று வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு புனித நீக்கிலார் சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. அமலநாதன்
(பேரன்)

''புஸ்பவாசா''
உசன்,
மிருசுவில்.

(9248)

### வல்லிபுரம் சுப்பிரமணியம் (ஆச்சாரியார்)

வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் சுப்பிரமணியம் (ஆச்சாரியார்) 24-01-1997 அன்று பனங்காமம் மாங்குளத்தில் காலமாகி விட்டார்.

அன்னார் தனலக்குமியின் அன்புக் கணவரும், குலசிங்கம் (ஜேர்மனி), இன்பராசா, சுரேஷ், யெயராமன் காலஞ்சென்ற இலட்சுமணன், கலைவாணி, பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தகப்பனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் மாங்குளத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
வ. சரவணமுத்து

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(45124)

### அம்பலவாணர் சுப்பிரமணியம் (இராசையா)

நுணாவில் கிழக்கைச் சேர்ந்த அம்பலவாணர் சுப்பிரமணியம் (முன்னாள் நகரசபை உறுப்பினர்) நேற்று (05 - 02 - 1997) அதிகாலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், சிறீதரன் பத்மினிதேவியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் நாகரெத்தினம், துரையப்பா மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜமுனாசங்கரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (5-2-97) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3-00 மணிக்கு கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்:
சி. பத்மினிதேவி
(மகள்)

தாளையம்பதி வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(சி/73)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் ராணுவ ஹெலிகள் நடுவானில் மோதிச் சிதறின!

## ''மின்னல்படைவீரர்கள்'' 73பேர்பலி!!

டெல் அவிவ், பெப். 6

இஸ்ரேலிய இராணுவ ஹெலிகள் இரண்டு நேற்று முன்தினம் நடுவானில் நேருக்கு நேராக மோதிச் சிதறின. இந்தக் கோர விபத்தில் எழுபதுக்கு மேற்பட்ட இஸ்ரேலியப் படையினர் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேலின் ''மின்னல் படை'' வீரர்களையும் வெடி மருந்து வகைகளையும் ஏற்றிக் கொண்டு தெற்கு லெபனானில் இஸ்ரேலிய ஆதிக்கத்தில் உள்ள இடைநிலைப் பிராந்தியத்துக்குச் சென்று கொண்டிருந்த வேளையே ஹெலிகள் மோதி விபத்துக்குள்ளாகின.

அடர்ந்த பனி மூட்டத்துக்குள் சிக்கியே ஹெலிகள் ஒன்றுடன் ஒன்று மோதித் தரையில் வீழ்ந்தன.

விபத்துக்குள்ளான ஹெலிகளில் ஒன்று ஜெயிலி பாண் ஹண்டிப் பகுதி கிராமம் ஒன்றிலும் — மற்றையது பாரிய கல்லறை ஒன்றுக்குள்ளும் வீழ்ந்ததாக அறிவிக்கப்பட்டது.

இஸ்ரேலிய இராணுவ வரலாற்றிலே மிக மோசமானது எனக் கருதப்படும் இந்த விபத்துக் குறித்து பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

விபத்தின் காரணத்தை அறிய உயர்மட்ட விசாரணைக்கு அவர் உத்தரவிட்டிருக்கிறார்.

''இஸ்ரேலுக்கு இது ஆண்டவன் கொடுத்த தண்டனை'' என்று லெபனானில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர் என அறிவிக்கப்படுகிறது.

## உலக அரங்கில்

இஸ்ரேலிய அரசாங்கம் படை வீரர்களின் மறைவையொட்டி ஒரு நாள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்டலின் ஆல்பிரைப், ஜோர்தான் பட்டத்து இளவரசர் ஆகியோர் பிரதமர் நெத்தன்யாகுவுடன் தொடர்பு கொண்டு இந்த விபத்துக் குறித்து அனுதாபம் தெரிவித்தனர்.

(ஐ-3-5)

## பாகிஸ்தானுடன் நல்லுறவு: இந்திய அரசு நம்பிக்கை

புதுடில்லி, பெப். 6

நவாஸ் ஷெரீப்பின் தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்கவிருக்கும் பாகிஸ்தான் அரசிற்கும், இந்தியாவிற்கும் இடையில் எதிர் காலத்தில் நல்லுறவு ஏற்படும் என இந்திய அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

புதிய அரசு பொறுப்பேற்றாலும் பாகிஸ்தானின் வெளியுறவுக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் ஏற்படப் போவதில்லை என அரசியல் ஆய்வாளர்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

இதே வேளை, நவாஸ் ஷெரீப்புடன் தான் ஒத்துழைப்பு நல்க விரும்புவதாக முன்னாள் பிரதமர் பெனாஸீர் பூட்டோ கூறியுள்ளார்.

[ஐ-5]

## மரண தண்டனையை ரத்து செய்ய அமெ. வழக்கறிஞர்கள் கோரிக்கை

வாஷிங்டன், பெப். 6

அமெரிக்க ஐக்கிய நாட்டில் மரணதண்டனை வழங்கும் சட்டத்தை ரத்துச் செய்யுமாறு அந்நாட்டு வழக்கறிஞர்கள் சங்கம் கோரியுள்ளது.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1972 இல் மரணதண்டனை சட்டமாக்கப்பட்டதைத் தொடர்ந்து இதுவரை 350 பேர் மரணதண்டனையால் இறந்துள்ளனர் என்றும் —

18 வயதிற்குட்பட்டோர் மற்றும் மனநோயாளிகள் போன்றோருக்கு விதிக்கப்படும் மரணதண்டனையை உடனே நிறுத்த வேண்டும் என்றும் — இவ்வழக்கறிஞர்கள் அமைப்பு கேட்டுள்ளது.

மேற்கு நாடுகளில் மரண தண்டனை விதிக்கும் வழக்கம் இன்னும் பழக்கத்திலுள்ள ஒரே நாடு அமெரிக்கா என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5)

## ஈரானில் பூமி அதிர்ச்சி 40 பேர் பலி!

தெஹிரான், பெப். 6

ஈரானில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியினால் 40 பேர் பலியானதாகவும் 90 பேர் வரை காயமடைந்ததாகவும் அரசாங்க தொலைக் காட்சி அறிவித்தது.

இந்த பூமி அதிர்ச்சியினால் வடகிழக்கு ஈரானில் 34 கிராமங்கள் தரைமட்டமானதாகவும், மேலும் பல கிராமங்களில் பலத்த சேதங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-5)

## காயமடைந்த மகனுடன் தொலைக்காட்சியில் சதாம்!

பாக்தாத், பெப், 6

கடந்த டிசெம்பர் மாதம் கொலை முயற்சிக்கு ஆளாகி துப்பாக்கிக் குண்டுகளால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ஈராக் அதிபர் சதாம் ஹுசேயினின் மகன் உதேயுடன் படுக்கையறையில் சதாம் ஹுசேயினும் அவரது மனைவி சிஜாதாவும் இருக்கும் காட்சியினை ஈராக் தொலைக்காட்சி ஒளிபரப்பியுள்ளது.

சிஜாதா ஹுசேய்ன் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று அமெரிக்க உளவு நிறுவனம் பரப்பிய வதந்திகளுக்கு இத்துடன் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

அதிபர் சதாமும் மனைவியும் தமது மகனைப் பார்க்க வரும் நண்பர்களைச் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றுக் கொள்வதாகவும் ஈராக் தொலைக்காட்சி அறிவித்தது.

(ஐ-5)

# புலிகள் இல்லாத தமிழர் அதிகார மையம்; சந்திரிகாவின் காய் நகர்த்தல் பலிக்குமா?

**'இந்தியாருடே' சஞ்சிகை செய்தியாளர் ஜி.சி. சேகர் சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார். அயல் நாட்டுப் பத்திரிகையாளர் ஒருவரின் பார்வையில் யாழ்ப்பாணமும் அங்குள்ளஅரசியல் நிலைவரமும் எப்படித் தெரிகின்றன என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.**

பத்து வருடங்களாக யாழ்ப்பாணத்திலிருந்து ''ரெகுலராக'' ஏற்றுமதியான ஒரே பொருள், தீவிரவாதமாகத்தானிருக்கும். குறிப்பாக, விடுதலைப்புலிகளின் கைவரிசை.

இப்போது மக்களுக்கு உபயோகமான பொருள் ஒன்று கொழும்புக்கு ஏற்றுமதியாவது காலத்தின் கோலம், அது வெங்காயம்.

### பதற்றம் குறையவில்லை

இலங்கை இராணுவம் புலிகளை யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டி அதைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து சரியாக ஒரு வருடம் கழிந்து சகஜ நிலை திரும்பியிருப்பது போலத் தெரிகிறது. கடைகளில் போதுமான அளவு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கின்றன. உள்கட்டமைப்பு வசதிகள் சீரமைக்கப் படுகின்றன. ஆனாலும் பதற்றம் குறைந்த பாடில்லை.

யுத்த சமயத்தில் வீடு வாசலை விட்டுக் கிளம்பிய மக்களில் பெரும்பாலானோர் ஊர் திரும்பவில்லை. 1981 இல் எட்டு இலட்சமாக இருந்த மக்கள் எண்ணிக்கை இப்போது 4.21 இலட்சமாக குறைந்திருக்கிறது.

மூலைக்குமூலை இராணுவ சோதனைச்சாவடிகள், அவை உள்ளூர் மக்களை சோதனை போடுகின்றன. இரவு நேர ஊரடங்கு உத்தரவு இன்னும் தளர்த்தப்படவில்லை. இராணுவத்தின் மீது மக்களின் சந்தேகம் இன்னும் அதிகரித்திருக்கிறது.

இராணுவத்தினருக்கும் யாழ். பொது மக்களுக்கும் இடையே இணக்கத்தை உண்டு பண்ணப் படாதபாடு பட்டுவரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க யாழ்ப்பாணத்திலும் வடக்கில் மற்ற மூன்று மாவட்டங்களான வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய வற்றிலும் இந்த வருட ஆரம்பத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடக்கும் என்று அறிவித்தார்.

ஆனால் தமிழர் கட்சிகளின் பலத்த எதிர்ப்பினால் தேர்தலை மூன்று மாதம் ஒத்தி வைக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்.

தேர்தல் நடக்க இருந்த இடங்கள்: யாழ்ப்பாணம் நகராட்சி, தீபகற்பத்தில் 3 நகராட்சிகள், யாழ்ப்பாணத்தில் 12 உம், கிளிநொச்சியில் 3 உம், வவுனியாவில் 4 உம் மன்னாரில் 4 உம் ஆக மொத்தம் 23 பிரதேச சபைகள்.

ஜனாதிபதிக்கு சித்து வேலை காட்ட இதை விட்டால் வேறு வழியில்லை. புலிகள் அல்லாத தமிழர் கட்சிகளை வைத்து தேர்தல் நடத்தி அதன் மூலம் புலிகளை ஓரங்கட்ட சந்திரிகா விரும்பும் அதே நேரத்தில் நாடாளுமன்றத்தில் தனது அதிகாரப் பகிர்வு திட்டத்தைக் கொண்டுவர இதே கட்சிகளின் ஆதரவு அவருக்குத் தேவைப்படுகிறது.

தேர்தல் நடத்த இது சரியான நேரமில்லை என்று இந்தச் கட்சிகள் அனைத்தும் சொன்னதும் தேர்தல் ஒத்திவைப்புக்கு அவர் இணங்க வேண்டியதாயிற்று.

யாழ். பகுதியில் நம்பகமான அமைதி மறுபடியும் நிலவ வேண்டும் என்பது முக்கியம். அந்த அமைதி, கொந்தளிப்பு நிலவும் யாழ். தீபகற்பத்திற்குள் மேலும் மக்களை ஈர்க்க வழி செய்ய வேண்டும் என்பதோடு யாழ்ப்பாணத்தை சீரமைக்கத் தேவைப்படும் வெளிநாட்டு உதவி கிடைப்பதற்கும் வழி செய்வதாக இருக்க வேண்டும்.

''யாழ்ப்பாணத்தை அதன் பழைய நிலைக்குக் கொண்டு வர இலங்கைக்கு ரூ. 600 கோடி தேவை'' என்று ஒப்புக் கொள்கிறார் ஓர் அரச அதிகாரி. கடந்த மாதம் தான் சில நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் இலங்கைக்கு 90 கோடி டொலர் (ரூ. 3, 300 கோடி) தர ஒப்புக் கொண்டன. யாழ்ப்பாணத்தில் அமைதி திரும்பினால் அதற்கு தரப்படும் உதவி தனி.

இங்கே உணவு இப்போது ஒரு பிரச்சினையே இல்லை. திரும்பி வரும் குடும்பங்களைக் குடி அமர்த்த நிர்வாக அதிகாரிகள் பரபரப்பாகச் செயல்பட்டாலும் கட்டுமானப் பணிகள் முழுமையாக நடைபெறவில்லை. இது போக அரசு ஆயிரக்கணக்கான வீடுகளை மராமத்து செய்ய வேண்டும். 1990 முதற்கொண்டே கணக்கிட்டு நஷ்ட ஈடு தரவும் வேண்டும்.

ஆனால் புலிகள் இல்லாத தமிழர் அதிகார மையம் உருவாக்குவது என்ற சந்திரிக்காவின் காய்நகர்த்தலுக்குப் பலன் கிடைக்குமா? மக்கள் இப்போதும் புலிகளை ஆதரிக்கிறார்கள்.

### பேராசிரியர் கருத்து

''புலிகள் மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுகளை சுமத்தலாம். ஆனால் அவர்களை ஒதுக்கித்தள்ளும் மனநிலை மக்களுக்குஇல்லை. எந்த ஓர் ஒப்பந்தமும் புலிகளை உள்ளடக்கியதாகஇருக்கவேண்டும். இல்லையென்றால் இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு நேர்ந்த கதிதான் அதற்கும்,'' என்கிறார் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர்.

சந்திரிகா ஆதரவு கட்சிகளும் உள்ளாட்சித் தேர்தல் அறிவிப்பால் துள்ளிக் குதிக்கவில்லை. ''வாக்களிக்கும்படி ராணுவம் மக்களை நிர்ப்பந்தித்தால் தேர்தலே கேலிக் கூத்தாகிவிடும். பாதிக்கும் மேற்பட்ட மக்கள் இன்னும் வீடு திரும்பாத நிலையில் தேர்தல் எப்படி நியாயமாக இருக்கும்?'' என்று கேட்கிறார் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் பொதுச் செயலர் டக்ளஸ் தேவானந்தா.

அதிகாரப் பரவலுக்கான திட்டங்களைப் புலிகள் அல்லாத தமிழர் கட்சிகள் ஆதரவுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என்று சந்திரிகா நம்புகிறார். ஆனால் அதற்கு அரசமைப்பில் திருத்தம் கொண்டுவர வேண்டும். அதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்கு வேண்டிய 10 எம். பிக்களின் ஆதரவு சந்திரிகாவுக்கு இன்னும் கிடைக்கவில்லை.

### பேச்சுக்களில் சந்திரிகாவுக்கு நம்பிக்கை இல்லை

புலிகளைப் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவர முடியும் என்று சந்திரிகாவுக்கு கொஞ்சமும் நம்பிக்கை இல்லை. இரண்டு தரப்புமே எதிரும் புதிருமான நிலை எடுத்திருக்கின்றன.

புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்று அரசு விரும்புகிறது. ஆனால் புலிகள் தலைவர் பிரபாகரனோ, இராணுவம் முதலில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற வேண்டும் என்கிறார். இரண்டு நிபந்தனைகளுமே ஏற்றுக் கொள்ளப் படப் போவதில்லை.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்திற்கு கிடைத்த வெற்றியைக் கண்ட தீவிரப்போக்குள்ள சிங்களவர்கள் இனப் பிரச்சினைக்கு இராணுவத்தின் மூலமே தீர்வு காணும்படி கோருகிறார்கள். ''அது மிகக் குறுகிய சிந்தனையோட்டம், அரசியல் தீர்வு தான் சரி, அதுதான் அமைதி திரும்ப வழி, பலத்தின் துணை கொண்டு தனியரசு நிறுவும் போக்கில் புலிகள் போகிறவரையில் அதை முறியடிக்க இராணுவ நடவடிக்கை தேவைப்படும்'' என்று இந்தியா ருடேயிடம் கூறினார் கதிர்காமர்.

சந்திரிகாவும் விடுதலைப் புலிகளும் பல்வேறு வியூகங்களை முயற்சித்துப் பார்த்தாலும் கூட அமைதி என்னவோ கைநழுவித்தான் போகிறது.

உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்திருந்தால் அரசின் மனோதிடம் கூடியிருக்கக் கூடும். ஆனால் அதன் மூலம் அமைதி திரும்பியிருக்குமா என்பது கேள்விக்குறிதான். ✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி. பி. ஸியின் செய்தியறிக்கைகள் இலங்கை வானொலியிலும் அஞ்சல்

## கொழும்பில் ஒப்பந்தம் கைச்சாத்து

லண்டன், பெப். 6

பி.பி.ஸி. உலக சேவையில் ஒலிபரப்பாகும் சில செய்தி அறிக்கைகள் இலங்கை வானொலியில் நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளன.

இதற்கான ஒப்பந்தம் ஒன்று பி.பி.ஸி உலக சேவை நிறுவனத்துக்கும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்துக்கும் இடையே கொழும்பில் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது.

இந்த ஒப்பந்தத்தின்படி தினமும் பி பி.ஸியின் சிங்கள மொழிச் செய்தி அறிக்கை ஒன்றையும், ஆங்கில மொழி மூலமான செய்தி அறிக்கைகள் இரண்டினையும் இலங்கை வானொலி அஞ்சல் செய்யும்.

'வேல்ட் ரூடே,' 'வேல்ட் பிஸ்னஸ் ரிப்போட்'' ஆகிய தலைப்புகளில் வெளியாகும் பி. பி. ஸி. நிகழ்ச்சிகளையும் வேறு சில நிகழ்ச்சிகளையும் இலங்கை வானொலியில் கேட்க முடியும்.

லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் செய்தியறிக்கைகளை அப்படியே எந்தவித குறுக்கீடும் இன்றி இலங்கை வானொலி அஞ்சல் செய்ய ஒப்பந்தத்தில் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூர் தகவல் தொடர்பு சாதனங்கள் மீது தணிக்கை விதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் கூட இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும் இந்த பி. பி. ஸி. நிகழ்ச்சிகளுக்கு அத்தடை பொருந்தாது என்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தினால் இலங்கை நேயர்கள் பி.பி.ஸி செய்திகளை இலங்கை வானொலியில் பண்பலை வரிசையில் தெளிவாகக் கேட்க வாய்ப்பு ஏற்படும். [ஐ-3]

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பொலீஸார் சிரமதானம்

தென்மராட்சி, பெப். 6

நாட்டின் 49 ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் பொலீஸார் சிரமதானம் செய்தனர்.

சாவகச்சேரி பொலீஸ் நிலைய தலைமைக்காரியாலய பரிசோதகர் பேர்னாட் சில்வா, நிலையப் பொறுப்பதிகாரி பால்தசார சப் இன்ஸ்பெக்டர் விதுரா, சப் இன்ஸ்பெக்டர் சுரேஷ் டி சில்வா ஆகியோர் தலைமையில் பெண் பொலீஸார் உட்பட எழுபதுக்கு மேற்பட்ட பொலீஸார் இச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரி டாக்டர்களும், ஊழியர்களும் சிரமதானத்தில் கலந்து கொண்டனர். (ஐ-117)

## துலாஞ்சலி மறுப்பு

கொழும்பு, பெப். 6

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கணவரான விஜயகுமாரதுங்க கடந்த 1988 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டதன் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ இருந்தார் என்ற ஜனாதிபதியின் குற்றச்சாட்டை. பிரேமதாஸாவின் மகளான துலாஞ்சலி ஜெபக்கொடி கடுமையாக மறுத்துள்ளார்.

விஜயகுமாரதுங்க கொல்லப்பட்டு 8 மாதங்களின் பின்னர் தான் தனது தந்தை பிரேமதாஸா ஜனாதிபதியாகப் பதவியேற்றார் என்றும் —

தற்போது வெளியிடப்பட்டுள்ள விசாரணைக்குழு அறிக்கை தனது தந்தையின் நற்பெயருக்கு பங்கம் விளைவிக்கும் நோக்கோடு ஜனாதிபதியின் விருப்பத்தின்படி தயாரிக்கப்பட்டது — என்றும் அவர் கூறினார். (ஐ 3)

## வவுனியா நகரை அதிர வைத்த குப்பையில்கிடந்த சீனவெடிக்கட்டு

கொழும்பு பெப். 6

குப்பையில் கிடந்த சீன வெடிக்கட்டு வவுனியா நகரையே அதிர வைத்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை நண்பகல் இடம் பெற்றது.

வவுனியா நகரில் கடைப்புறத்தில் உள்ள குப்பை கூளங்களைக் கூட்டிக் குவித்து அதற்குத் தீவைத்த போது படபட என்று வெடிச் சத்தங்கள் எழுந்தன.

வெடிச்சத்தம் கேட்ட போது பொருள்கள் வாங்க வந்தோரும் ஏனையோரும் பதறியடித்துக் கொண்டு ஓடினர்.

கடைகள் அவசர அவசரமாக இழுத்து மூடப்பட்டன. சுமார் அரைமணி நேரம் இந்த அல்லோலகல்லோலம் நீடித்தது.

பின்புதான் குப்பையில் இருந்து வெடித்தது சீன வெடிகள் என்பது தெரிய வந்ததாம். (இ)

## உதவித் தொகை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 6

பொதுமக்கள் தமது வீடுகளில் மலசலகூடம் அமைப்பதற்கு உதவித்தொகையாக இதுவரை காலமும் ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட்டுவந்தது. அது இப்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் இந்த உதவித் தொகை 3 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் சுகாதாரசேவைகள் அமைச்சரின் சுற்று நிருபம்யாழ். சுகாதார சேவைகள் அலுவலகத்துக்கு நேற்று முன்தினம் கிடைத்தது. (உ-3)

## உள்ளூராட்சித் தேர்தலில் றுகுணு ஜனதா போட்டி

கொழும்பு, பெப். 6

காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 'றுகுணு ஜனதா கட்சி, என்ற புதிய கட்சி போட்டியிட இருக்கிறது.

வலப்பிட்டியில் உள்ள தமது கட்சியின் தலைமையகத்தில் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்றுவருவதாகவும் —

வேட்பாளர் பட்டியல் தயாரானதும் கதிர்காமத்தில் விசேட பூசை நடத்திய பின் பிரசாரம் ஆரம்பிக்கப்படும் என்றும் — கட்சியின் செயலாளர் அருணா சொய்ஸா தெரிவித்தார். [இ-3-150]

## சேவல் சின்னத்தில் போட்டியிட செல்லச்சாமியின் அனுமதி தேவை

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

உள்ளூராட்சித் தேர்தலில் நாட்டின எப்பகுதியிலும் ஒரு குழுவினர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சேவல் சின்னத்தின் கீழ் போட்டியிடுவதானால் அவர்கள் எம். எஸ். செல்லச்சாமியின் அனுமதி பெற்றே போட்டியிட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் உதவித் தேர்தல் ஆணையாளர் ஏ. டி. பீ. சில்வா.

இ. தொ. காவின் பொதுச் செயலாளராக — இலங்கைத் தேசிய தொழிலாளர் காங்கிரஸின் தலைவராகத் தற்போது இருக்கும் — எம். எஸ். செல்லச்சாமியையே தேர்தல் ஆணையாளர் அறிவித்தார்.

இந்நிலையில் இ. தொ. காவின் உட்பிணக்கு தொடர்பான வழக்கில் தீர்ப்பு வழங்குவது இன்னும் சில மாதங்கள் தாமதமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மலையகத்தின் குறிப்பிட்ட சில பிரதேச சபைகளில் இ. தொ. கா தனித்து வேட்பாளர் பட்டியலை சமர்ப்பித்துப் போட்டியிட வேட்புமனுவைத் தாக்கல் செய்வதானால் செல்லச்சாமியின் அனுமதியைப் பெற்றாக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. (ஐ)

(மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்)

## பளை மத்திய கல்லூரி:

## நேரம் மாற்றம் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு

தென்மராட்சி, பெப். 6

பளை மத்திய கல்லூரி நேற்று முதல் காலை 9-30 மணி தொடக்கம் பிற்பகல் 3-30 மணி வரை இயங்க ஏற்பாடாகி இருந்தது.

இந்தக் கல்லூரி ஆசிரியர்கள் தாமதமாக வருவதால் பிள்ளைகளின் கல்வி நிலை பாதிக்கப்படுவதாக பெற்றோர்கள் முறையிட்டதையடுத்து கல்லூரி பாட நேரம் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியர் தாமதமாக வருவதைக்கண்டித்து பெற்றோர்கள் கடந்த திங்கட்கிழமை மறியல் போராட்டம் நடத்தி இருந்தனர்.

வலயம் 1 கல்விப் பணிப்பாளருக்கு பெற்றோர்களினால் இது தொடர்பான மகஜர் ஒன்றும் அனுப்பப்பட்டிருந்தது.

1997 ஆம் ஆண்டு பாடசாலையில் தயாரிக்கப்பட்ட நேர சூசி ஆசிரியர்களின் நலனுக்குத் தக்க மாதிரியே தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் —

மாணவர்களின் நலன் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்றும் —

நேர சூசிப்படி பாடங்கள் ஒழுங்காக நடக்க ஆவன செய்யுமாறும் — அந்த மகஜரில் கோரப்பட்டிருந்தது. (இ-117)

## வேட்பாளர் பட்டியலில் உறவினரைச் சேராதீர்!

### அமைச்சர்களுக்கு சந்திரிகா உத்தரவு

உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான வேட்பாளர் பட்டியலில் தங்கள் பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்களைச் சேர்க்கக்கூடாது என்று தமது அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு ஜனாதிபதி கண்டிப்பாக உத்தரவிட்டுள்ளார்.

நீண்டகாலமாக கட்சியின் ஆதரவாளர்களாக இருந்து வரும் பலருக்கு வேட்பாளர் பட்டியலில் இடம் கிடைக்காமற் போயிருப்பதாகக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் தெரிவித்ததை அடுத்தே சந்திரிகா இந்த உத்தரவை விடுத்திருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

சந்திரிகாவின் இந்த உத்தரவு கட்சியின் இன்னும் சில உறுப்பினர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## தொண்டர் ஆசிரியர் மூவர் ஊக்குவிப்புப் பணம் பெறுவர்

### ஈ. பி. டி. பி. ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் மூவருக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படவிருக்கிறது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ பி.டி.பி) செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. டக்ளஸ் தேவானந்தா இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

ஆனைக்கோட்டை றோ. க. பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவருக்கும், கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா கிராம முன்னேற்றச் சங்கத்தின் பாலர் பாடசாலையைச் சேர்ந்த இரண்டு ஆசிரியர்களுக்குமே ஊக்குவிப்புப் பணம் கிடைக்கவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தீவுப் பகுதியில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் அனைவரும் ஈ. பி டி பியினரின் ஏற்பாட்டில் ஊக்குவிப்பு பணம் பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## அச்சுவேலிப் பகுதி மாணவருக்கு பாடசாலை உபகரணங்கள்

யாழ்ப்பாணம், பெப். 6

அச்சுவேலிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு படையினரால் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக இராணுவ வட்டாரங்கள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அச்சுவேலிப் பிரதேசத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள பாடசாலை மாணவர்களுக்கு பெருந்தொகையான பாடசாலை உபகரணங்கள் அப்பிரதேசத்துக்கு பொறுப்பான 29 ஆவது படையணித் தலைமையகப் பொறுப்பதிகாரியினால் வழங்கப்பட்டன.

அப்பிரதேசப் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பாடசாலை மாணவர்களின் குறைபாடாகத்திகழ்ந்த பல தேவைகள் அப்பிரதேசத்தில் நிலை கொண்டுள்ள 29 ஆவது படையணிப்பிரிவு தலைமையகப் படையினரால் பூர்த்திசெய்து கொடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலைக் கட்டடங்களைப் புனரமைத்தல், மரத்தளபாடங்களை வழங்கல் என்பன அப்படையணித் தலைமை அதிகாரியால் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கிடையே பாடசாலை மாணவர்களுக்குப் பாரிய குறைபாடாகத் திகழ்ந்த விளையாட்டு உபகரணப் பொருள்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்களைப் பங்கிட்டு வழங்கல் என்பன அப்படையணித் தலைமையகத்தில் கடமையாற்றும் சகல படைவீரர்களாலும் வழங்கப்பட்ட உதவிப் பணத்தின் மூலம் ஜனவரி மாதம் 20, 21 ஆகிய இரு தினங்களில் அப்படையணிப் பொறுப்பதிகாரி தலைமையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

ஜனவரி மாதம் 20 ஆம் திகதி அச்சுவேலி புனித நேரியா கல்லூரி, ஆவரங்கால் நடராஜா ராமலிங்கம் கல்லூரி, ஆவரங்கால் மஹாஜனா கல்லூரி மற்றும் அச்சுவேலி சரஸ்வதிமகாவித்தியாலயம் ஆகியபாடசாலைகளுக்கு அப்பியாசக் கொப்பிகள் மற்றும்விளையாட்டுஉபகரணங்கள்என்பன வழங்கப்பட்டுள்ளதுடன் ஜனவரி21 ஆம் திகதி அச்சுவேலிமகாவித்தியாலயம் மற்றும் இடைக்காடு மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கு இவை வழங்கப்பட்டன.

உதைபந்து, கரப்பந்து, வலைப்பந்து, மற்றும் அவற்றுக்கான வலைகள், ''ஜவலின்''கள், பூப்பந்தாட்டத்துக்கான உபகரணங்கள், கயிறடித்தல் கயிறுகள், கிரிக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமரத்தடியில் பிரசாரம் ஆரம்பமாகும்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தனது தேர்தல் பிரசாரத்தை களுத்துறை அரசமரத்தடியில விசேட மத வைபவங்களுடன் ஆரம்பிக்க இருக்கிறது.

மாவட்ட ரீதியான 22 கூட்டங்களில் ஜனாதிபதி பங்குபற்றி உரையாற்றுவார்.

தொகுதி ரீதியாக நடைபெறும் கூட்டங்களில் அமைச்சர்கள் கலந்துரையாற்றுவார்கள். (இ-3-150)

## கைது

தற்கொலைப் படையைச் சேர்ந்தவர் என்ற சந்தேகத்தில் தேடப்பட்டுவரும் ஒரு பெண்ணின் முகச்சாயலைக் கொண்டவர் எனக் கருதப்படும் ஒரு பெண்ணை பண்டாரகமவில் வைத்து களுத்துறைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

மன்னாரைச் சேர்ந்த செபஸ்திபாம்பிள்ளை வரோனிக்கா (வயது 32 என்ற இந்தப் பெண் தாம் கிறிஸ்தவ சமயத்தின் முதியோர் இல்லங்களில் கடந்த 9 வருடங்களாகச் சேவையாற்றி வருவதாகவும் —

தெஹிவளை, ஜாஎல முதியோர் இல்லங்களில் பயிற்சி பெற்றதாகவும் — தெரிவித்துள்ளார். பொலீஸார் அவரைத் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர். (உ-3-150)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளை மறுசீரமைக்க ஆலோசனை கோரப்படுகின்றது

குருநகர், பெப்.

நாடுமுழுவதும் தற்போது இயங்கிவரும் அனைத்துப் பாடசாலைகளையும் மறுசீரமைக்க வேண்டும் என்ற ஆலோசனையை தேசிய கல்விச் சபை முன்வைத்துள்ளது.

இதற்கிணங்க தமது ஆலோசனைகளை அனுப்பி வைக்குமாறு கோரும் அறிவுறுத்தல்களை சகல மாகாண, மாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் மத்திய கல்வி உயர்கல்வி அமைச்சு அனுப்பி வைத்துள்ளது.

தேசிய கல்விச்சபை முன்வைத்துள்ள புதிய கல்விக் கொள்கையின் படி அனைத்துப் பாடசாலைகளும் இரு வகைகளாகப் பிரிக்கப்படும்.

ஆரம்பப்பாடசாலைகள் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 9 வரையான வகுப்புக்களையும்—

இரண்டாந்தரப் பாடசாலைகள் ஆண்டு 10தொடக்கம் ஆண்டு 13 வரையிலுமான வகுப்புகளையும்—கொண்டிருக்கும்.

இதன்படி பாடசாலைகள் யாவும் ஆரம்பப்பாடசாலைகளாகவும் (ஆண்டு1 - ஆண்டு 9 வரை) இரண்டாந்தரப் பாடசாலைகளாகவும் (ஆண்டு 10—ஆண்டு13 வரை) மட்டுமே இயங்க உள்ளன.

இந்த ஆலோசனைக்கிணங்க நடவடிக்கைகளை உடன் மேற் கொள்ளுமாறும் —

இது தொடர்பான படிவங்களை நிரப்பி வத்திய கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு —

மத்திய கல்வி உயர் கல்வி அமைச்சினால் வலயக் கல்வி அலுவலகங் கோரப்பட்டுள்ளன.

(இ-51)

## தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் யார்?

### நீதிமன்றத் தீர்ப்பு தாமதமாகும்

கொழும்பு, பெப். 6

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் யார் என்பது தொடர்பான வழக்கின் மீது தீர்ப்பு வெளியாவதில் இன்னும் இரண்டொரு மாதங்கள் தாமதமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் அமைச்சர் தொண்டமான் அணியினரால் இ. தொ. காவிலிருந்து வெளியேற்றப்பட்ட எம். எஸ். செல்லச்சாமியையே இ. தொ. காவின் பொதுச் செயலாளராகத் தொடர்ந்து அங்கீகரிப்பது என தேர்தல் ஆணையாளர் முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

இதனால் இ. தொ. கா. என்ற பெயரில் சில நடவடிக்கைகளை எடுப்பது தொண்டமான் அணிக்கு இயலாததாக இருக்கும் என அவதானிகள் சுட்டிக்காட்டினர்.

(உ-150)

## ★ சுதுமலைசிந்மயபாரதி வித்தியாலய

## புலமைப் பரிசில் பெறுபேறு இன்னமும் கிடைக்கவில்லை

அண்மையில் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளில் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் இருந்து தோற்றிய மாணவர்களது பெறுபேறுகள் இன்னமும் கிடைக்கவில்லை.

இப் பரீட்சை முடிவுகளைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் வித்தியாலய அதிபர் ஈடுபட்டிருக்கிறார்.

கடந்த காலங்களில் இப் பாடசாலைக்குரிய ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகளும் கிடைக்காமற் போய் பின்னர் தாமதமாகவே கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

(ஐ-152)

## யாழ். ப. நோ. கூ. சங்க கிளைக் குழு தேர்தல்

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கத்தின் 31 கிளைகளுக்குமான கிளைக்குழுத் தேர்தல்களுக்கு நியமனப் பத்திரங்களை ஏற்றுக் கொள்வது நேற்று ஆரம்பமானது.

இன்றும் வியாழன் காலை 9 மணி முதல் 10 மணிவரை சம்பந்தப்பட்ட கிளைகளில் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

நியமனங்கள் தொடர்பாக ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகளும் இன்று முற்பகல்10 மணி தொடக்கம் 12மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி நிலவும் கிளைகளுக்கான தேர்தல்கள் எதிர் வரும் 14 ஆம் திகதி நடைபெறும். இது தொடர்பான அறிவிப்பு பிரசுரங்களை சங்கத் தலைமைப் பணியகத்திலும், கிளைகளிலும் பார்வையிடலாம் என்று சங்கத்தின் பொது முகாமையாளர் திரு. எஸ் சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

(ஜ-4-30)

## அச்சுவேலிப் பகுதி...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கெட் உபகரணங்கள் போன்ற விளையாட்டு உபகரணங்கள் சகல பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. அவை தவிர முதலாம் ஆண்டு முதல் சகல வகுப்பு மாணவர்களுக்கும் அப்பியாசப்புத்தகங்கள் மற்றும் பென்சில்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த விழாவின் இறுதியில் சகல பாடசாலைகளிலும் நன்றி உரையாற்றிய ஆசிரியர்கள் அனைவரும் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக படையினர் வழங்கிய உதவிக்காக மாணவர் பரம்பரை அவர்களுக்குக் கடமைப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் இந்த உதவிகள் தமக்கு மிகவும் அவசியமெனவும் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் பேசிய படையணிப் பொறுப்பதிகாரி, மொழிகள் மக்களை இணைப்பதற்காக உருவானவையே தவிர அவர்களைப் பிரிப்பதற்கு உருவாக்கப்படவில்லை எனவும்—

எனவே சிங்கள மாணவர்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளையும், தமிழ் மாணவர்கள் சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளையும் கற்று ஒற்றுமையாக வாழவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5)


## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி கனகம் சத்தியானந்தசிவம்

மலர்வு: 14 - 10 - 1926

நிறைவு: 19 - 01 - 1996

திதி: 06 - 02 - 1997

எமது நிலையத் தலைவர் திரு. க. சத்தியானந்தசிவம் (சச்சி மாஸ்டர்) அவர்களின் அன்பு மனைவியார் ஆத்மசாந்தியடைந்த ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு எமது நினைவஞ்சலியை அவருக்கும், அவரது பிள்ளைகளின் குடும்பத்தினருக்கும் காணிக்கையாக்குகின்றோம்.

கமநலச் சேவை நிலையம்,
கமநலச் சேவைத்திணைக்களம்,
கமத்தொழில் காப்புறுதிச்சபை.

கமநலச் சேவைநிலையம்,
நல்லூர்.

(45086)


## தந்தை செல்வா நூற்றாண்டு

மலாயா நாட்டின் ஈபோ நகரிலே பிறந்து ஈழம் வந்து தமது தாய்த் திருநாட்டின் மீள்விப்புக்காகத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டவர் தந்தை செல்வா. அன்னாரின பிறந்த நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களை 1998 மார்ச் 31 முதல் எதிர்கொள்வதற்கு நன்றியுள்ள ஈழத் தமிழ் மக்கள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இப்போதிருந்தே தயாராகி வருகின்றனர்.

மேற்படி கொண்டாட்டங்களுக்கு முன்னோடியாக, முன்னர் ஆண்டு தோறும் நிகழ்த்தப்பட்டு வந்த தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவுத் தொடர் இந்த வருடத்தில் இருந்தேனும் திரும்பவும் புதுப்பிக்கப்படுமா?

தந்தை செல்வா ஞாபகார்த்த நினைவுச் சொற்பொழிவுகளை ஒழுங்கு செய்து நடத்துவதற்குப் பொறுப்புடையதான தந்தை செல்வா அறங்காவல் குழு தற்சமயம் அனேகமாக கலைந்துபோன நிலையிலேயே விடப்பட்டுள்ளது. ஆகவே தந்தை செல்வா பிறந்த நூற்றாண்டு விழா அமைப்பாளர் செய்ய வேண்டிய முதற்பணி தந்தை செல்வா அறங்காவல் குழுவுக்கு மீண்டும் உயிரூட்டுவதே.

மேலும் தந்தை செல்வாவின் பிறந்த மற்றும் மறைந்த தினங்களில் தந்தை செல்வா நினைவாலயத்தில் நடைபெற வேண்டிய மலர் அஞ்சலி நிகழ்ச்சிகள் திரும்பவும் அங்கு இடம்பெற யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் வாய்ப்பை ஏற்படுத்தித் தருமா? மேற்படி நினைவாலயச் சூழல் பொது மக்களின் பாவனைக்கும் பாதுகாப்பானதாக உள்ளதா என்பதை உறுதி செய்து கொண்டு அவ்விடத்தில் மண்டிக் கிடக்கும் முட்புதர்களை அகற்றும் பணியில் இறங்க வேண்டும்.

### வாசகர் திருமுகம்

நாகரிகமடைந்த நாடுகள் தமது தேசியத் தலைவர்களது பிறந்த நூற்றாண்டு விழாக்களைக் கொண்டாடும் போது அந்தத் தேசத் தலைவர்கள் தமது வாழ்நாளில் நிகழ்த்திய உரைகளையும், எழுத்துருவில் விட்டுச் சென்றுள்ள எழுத்தோவியங்களையும் மறு ஒலிபரப்புச் செய்தும், மறுவெளியீடு செய்தும் வருவதை நடைமுறையாக்கிக் கொண்டுள்ளன. ஈழத் தமிழரும் அந் நடைமுறையைப் பின்பற்றுவதற்கு தடையேது?

ஒரு தேசத் தலைவர் அல்லது பெரியாரின் ஜனன நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் போது அந்தத் தேசத் தலைவரின் இலட்சியக் குறிக்கோள் மறக்கப்படுவதற்கு குறிப்பிட்ட விழா துணை போக அனுமதிக்கமாட்டார்கள். மாறாக அன்னாரது இலட்சியத் தரிசனங்களை நிதர்சனமாக அடைவதற்கே கரிசனை எடுத்துக்கொள்ளுவர்.

தந்தை செல்வாவின் ஜனன நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களும் அவ்வகையில் உரிய பலனை எய்த நன்றியுள்ள தமிழ் மக்கள் சிரமம் எடுத்துக் கொள்ளுவார்களாக!

சா. ஆ. தருமரத்தினம்.

றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

## வலிகாமம் பகுதியில் இம்முறை புகையிலைச் செய்கை மும்முரம்

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுகளில் இம்முறை அநேக தோட்டச் செய்கையாளர்கள் புகையிலைச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

உரும்பிராய், இணுவில் மருதனார்மடம், உடுவில், தாவடி, சுதுமலை போன்ற இடங்களில் இம்முறை அமோகமாக புகையிலைப் பயிர் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

பல இடங்களில் செய்கை பண்ணப்பட்ட வெங்காயப் பயிரை அழித்து விட்டுப் புதிதாகப் புகையிலைச் செய்கையை தோட்டக்காரர்கள் ஆரம்பித்துள்ளார்கள்.

வெங்காயச் செய்கையின் மூலம் இழந்த நஷ்டத்தை ஈடு செய்யும் நோக்கோடு புகையிலைச் செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதாக தோட்டச் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

(ஐ-152)


மீண்டும் "குறிஞ்சி மெடிக்கல்ஸ்" அதே இடத்தில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றார்கள்.

குறிஞ்சி மெடிக்கல்ஸ்

பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.

(9236)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/உடுவில் கல்விக் கோட்டத்தின்
பிரதிக்கல்விப்பணிப்பாளராக பணிபுரிந்தவரும்
எமது பாடசாலையில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றும்

**திருமதி யோகேஸ்வரி இரத்தினராசா**

அவர்களின் துணைவரும், எமது பாடசாலையின் கல்வி அபிவிருத்திக்குப் பெருந் தொண்டாற்றியவருமான

**திரு. சு. இரத்தினராசா**

அவர்கள் சேவையில் அதி சிறப்புத்தரத்திற்கு பதவி உயர்வு பெற்று யா/கல்விவலயம் 1-க்கு கல்விப்பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளமையை அறிந்து அக மிகமகிழ்வதுடன் கல்விப்பணியில் இவரின் எதிர்காலமென் மேலும் துலங்கவும், நீடூழிவாழவும் எல்லாம் வல்ல உயரப்புலம் உத்துங்க விநாயகரை வணங்கி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்.
யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை
ஆனைக்கோட்டை.

(9247)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட Honda M D 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. திருச்செல்வராஜன், 56/2, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [9240]

2 அங்குலம் X 6 அங்குலம் [நீளம் 16 அடி] உடைய றங்கூன் தேக்கம் தீராந்திகள் புதிய இரும்பு வேல் கேற் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- திருமதி ப. கிருஷ்ணன் வட்டு. தென்மேற்கு, வட்டுக்கோட்டை. [வட்டுக் கோட்டை சந்திக்கு அண்மையில்] [45119]

கால்நடை மருந்து ''தயாகல்'' விற்பனைக்குண்டு. கீழ்க்காண் விலாசத்தில் உடன் தொடர்பு கொள்ளவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/70)

### தவறிவிட்டது

டச்சு வீதி, உடுவில், நல்லதம்பி சுமதியினது தேசிய அடையாள அட்டை இல. 767742894 V, விசேட அடையாள அட்டை இல. 0906006748 ஆகியவற்றுடன் கூடிய பேர்ஸ் கோண்டாவில் - மருதனார்மடம் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கோண்டாவில் உப்புமடச் சந்தியிலுள்ள சிந்துஜா வீடியோ கிளப்பில் ஒப்படைக்கவும். [45121]

### வாங்கப்படும்

உதிரிப்பாகங்களுக்காக நல்ல நிலையிலுள்ள ரி. வி., டெக், கசற் றேடியோக்கள், மணிக்கூடுகள் திருத்துவதற்கு வாங்சப்படும். M.V. மதுரநாயகம், இல. 284, ஸ்ரான்லி வீதி, [நாகவிகாரை முன்பாக] யாழ்ப்பாணம். [45097]

### மணமகள் தேவை

யாழ். இந்து சமயத்தைச் சேர்ந்த 30 வயதுடைய அரச உத்தியோக மணமகனுக்கு நற்பண்புடைய மணமகள் தேவை. தொடர்பு: இல. 580. மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். [45117]

### வகுப்புகள்

பௌதிகவியல், O/L கணித வகுப்புகள் சிறு குழுக்களாகவோ அல்லது தனிப்பட்ட வகுப்புகளாகவோ பல்கலைக்கழக பட்டதாரி மாணவரால் கற்பிக்கப்படும். 122, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். [45051]

## வகுப்புகள் ஆரம்பம்

குருநகர், பெப். 6

யாழ். திருமறைக் கலாமன்றத்தில் சித்திரம், நடனம், வாய்ப்பாட்டு வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. மிருதங்கம், வயலின் வகுப்புகள் வெகு விரைவில் ஆரம்பமாக உள்ளதாக அதன் செயலாளர் எம். நெல்சன் தெரிவித்தார். (உ-51)

## யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்
## விருந்தினர் விடுதி

யாழ். பல்கலைக்கழக விருந்தினர் விடுதியாக பயன்படுத்துவதற்கென சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்கு தேவைப்படுகின்றது. யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு மைல் சுற்றாடலில் வீடு அமைந்திருத்தல் வேண்டும். வாடகை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் பதிவாளர், யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபால் மூலம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

- பதிவாளர்

யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்,
1997 - 01 - 31

(சி-66)

## வாழ்த்துகின்றோம்

உடுவில் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளராக இருந்து யாழ். கல்வி வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ள

**திரு. சு. இரத்தினராசா**

அவர்களையும்

1996ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பாடசாலை மாணவர்களான

செல்வி கு. ஜென்சி - 130 புள்ளிகள்
செல்வி ச. நிசாந்தி - 104 புள்ளிகள்
செல்வி ப. பாமினி - 99 புள்ளிகள்

ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபை.

யா/ ஏழாலை தெற்கு
அ. மி. த. க. பாடசாலை,
சுன்னாகம்.

(சி/65)

## வரவேற்பும் வாழ்த்தும்

எமது கல்லூரியின் பழைய மாணவரும், முன்னாள் ஆசிரியரும், உடுவில் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான

**சுப்பிரமணியம் இரத்தினராசா**

அவர்கள் 1997 - 02 - 03 இலிருந்து யாழ்ப்பாணம் கல்வி வலயம் 1 இற்கு கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றதையிட்டு அவரைப் பெருமையுடன் வாழ்த்தி வரவேற்கின்றோம். அவரின் மகத்தான சேவை தொடர சிவகாமி சமேத நடராஜப் பெருமான் அருள் புரிவாராக.

பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்.

யா/ சேர் வை. து. ம. ம. வி, வேலணை.

(45112)

## ஓராண்டு நிறைவு



**திருமதி கனகம் சத்தியானந்தசிவம்**

மலர்வு: 14-10-1926

நிறைவு; 19 01-1996

திதி: 06 - 02 - 1997

எம்மை வளமாக வாழ பாதை அமைத்த நீ
இன்று வையத்து வாழ்வை நீக்கி
வானத்துள் உறைந்து ஓராண்டானாலும்
உம் நினைவு எம் மனதைவிட்டு என்றும் அகலாது

நீ வாழ்க! நீ வாழ்க! நீ வாழ்க!
ஓம் சாந்தி

உம் நினைவில் வாழும்:

**குடும்பத்தினர்**

40, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(45085)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா / தாவடி

**இந்து தமிழ்க்கலவன் பாடசாலை**

1996 புலமைப் பரீசில் பரீட்சையில் சித்தியடைந்த

செல்வன் ச. இராகவன் - 105 புள்ளிகள்
செல்வன் ச. வரதராஜன் - 100 புள்ளிகள்

ஆகிய இருவரையும், அவர்கள் சித்திக்கு காரணமான பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்,
மழைய மாணவர் சங்கமும்.

யா/தாவடி இந்து த. க. பா.

(45126)

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சிப் பிரதேச செயலர்

**திரு. புண்ணியர் சுந்தரம்பிள்ளை**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி புண்ணியர் சின்னத்தங்கம்**

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கண்ணீர் அஞ்சலிகள் செலுத்துகின்றோம்.

உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.

அரச முதியோர் இல்லம்,
கைதடி.

(45125)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் நா. கனகசபை (கட்ஸன்)**

9 - 11 - 96 இல் மறைந்த எமது யா/ சங்கானை ஸ்தான அ. மி. த. க. பாடசாலை அவிருத்திச் சங்கச் செயலாளர் அமரர் நா. கனகசபை (கட்ஸன்) அவர்களின் அளப்பரிய சேவையை நினைவு கூர்ந்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர், அ. ச. உறுப்பினர்.

(9230)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்; 02-10-1920

மறைவு: 07-01-1997

**திருமதி செல்லத்தம்பி நாகபூரணம்**

(மண்டைதீவு - கிழக்கு)

அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்ம சாந்திக்காகத் திருவருளை வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(45123)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கப்பல் பயணம்

வன்னிப் பகுதியிலிருந்து வவுனியா வருவோர் எண்ணிக்கை அதிகரிப்பு. அகதிகளைப் பராமரிக்க முடியாது அரசாங்க அதிகாரிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வருவதற்காக மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் திருகோணமலையில் தவம் கிடக்கிறார்கள்.

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறை வரும் பயணிகள் கப்பல்களில், அகதிகள் அல்லாதவர்களை ஏற்றக் கூடாது என்ற கட்டுப்பாடு காரணமாக, யாழ்ப்பாணம் வருவதற்குப் புறப்பட்ட அரசாங்க ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட கொழும்பு மற்றும் இடங்களில் இருந்து வந்தவர்கள் திருமலையில் காத்திருந்து பல வித கஷ்டங்களுக்கும், வேண்டாத துன்புறுத்தல்களுக்கும் உள்ளாகிறார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து அவசர அலுவலாக கொழும்பு மற்றும் பிற மாவட்டங்களுக்குப் பயணம் செய்வது என்பது சொர்க்கலோகத்துக்கு அனுமதி கிடைப்பது போலாகி விட்டது. பயணத்துக்கு விண்ணப்பப்பத்திரம் நிரப்பிக் கொடுத்து ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்குப் பின்னர் தான் பயணத் திகதி தெரியவரும்.

பயணத் திகதி தெரிய வந்தபின்னரும் கப்பல் புறப்படும் நாள், அதற்கு முதல் தினத்திலோ அல்லது பல சந்தர்ப்பங்களில் அன்று காலை பத்திரிகை மூலமோ தான் தெரியவருகிறது.

இவ்வாறாக யாழ்ப்பாணத்துக்கும் வெளிமாவட்டங்களுக்கும் இடையிலான பயணம் என்பது நரகவேதனையாகி விட்டது. மக்களின் நேரம், உழைப்பு என்பவற்றை வீணாக்கும் காரியமாகிவிட்டது.

வன்னியில் உள்ளவர்களை வவுனியாவுக்கு வாருங்கள் என்று அழைப்பது அரசாங்கம். வவுனியாவுக்குச் செல்லும் யாழ்ப்பாண மக்களை இங்கு செல்லுமாறு ஊக்கமளிப்பதும் அரசாங்கம். வெளிமாவட்டங்களில் தங்கியுள்ள யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய அரச ஊழியர்களை இங்கு வந்து கடமையாற்றுமாறு உத்தரவிடுவதும் அரசாங்கமே

ஆனால் காங்கேசன்—திருமலை கப்பல் சேவை திருப்திகரமாக நடக்கவேண்டும் என்பதில் அரசுக்கும் அதன் அதிகாரிகளுக்கும் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை.

பயணிகளின் எண்ணிக்கையை ஈடுசெய்யும் அளவுக்குக் கப்பல் சேவை திருப்திகரமாக நடத்தப்படவில்லை. சராசரி நூறு பயணிகளை ஏற்றக் கூடிய மூன்று கப்பல்களே இச் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. அதிக எண்ணிக்கையான பயணிகளை சேவையில் ஈடுபடுத்தவேண்டும்; இல்லையேல் வாரத்தில் மூன்று தடவைகள் நடக்கும் கப்பல் சேவையை ஆகக் குறைந்தது ஆறாகவேனும் அதிகரிக்கவேண்டும்.

தமிழர்கள் என்பதால் அவர்கள் எந்தவித சிரமங்களையும், தொல்லைகளையும், கஷ்டங்களையும் அனுபவிக்கட்டும் — அனுபவிப்பார்கள்—நாம் அது குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று கொழும்பில் அரச அதிகாரிகள் நினைக்கிறார்களா?

அதுவே உண்மையாயின் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரசைகள் என்று தம்மைக் கருதுவதில் என்ன தவறு?

# தேர்தல் பகிஷ்கரிப்பு முடிவால் ஸ்ரீமானியின் கட்சிக்குள் அதிருப்தி!

கொழும்பு, பெப். 6

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் பங்குபற்றாமல் ஒதுங்கியிருப்பது என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) எடுத்துள்ள முடிவால் அந்த முன்னணி முக்கியஸ்தர்களிடையே அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முன்னணியின் ஆறு எம். பிக்களில் ஒருவரான கேசரலால் முன்னணியில் இருந்து வெளியேறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை முன்னணியின் அந்தரங்கக் கூட்டம் ஒன்றை நடத்திய முன்னணியின் தலைவரும், அமைச்சருமான ஸ்ரீமானி அத்துலத்முதலி, தேர்தலில் பங்குபற்றுவதில்லை என்பதே இறுதி முடிவாகும் என்று தெரிவித்தார்.

முன்னணியின் ஆறு எம். பிக்களில் எதிர்வீர பிரேமரத்தின ஏற்கனவே சுதந்திரக் கட்சியில் சேர்ந்து விட்டார். இதற்கு நீதிமன்றமும் அனுமதி வழங்கிவிட்டது.

முன்னணியின் இருஎம். பிக்களான மொண்டி கோபல்லாவ, பி பி. ஜி. கலுகல்ல ஆகியோர் பிரதி அமைச்சர்களாக அரசாங்கத்தில் உள்ளனர்.

கேசரலால் அரசுடன் சேரும் பட்சத்தில் மிஞ்சப் போகும் எம். பிக்கள் ஸ்ரீமானி அத்துலத்முதலியும், ரவி கருணநாயக்காவும்தான் என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(உ-3-150)

## கப்பலில் பயணம் செய்வோருக்கு..

யாழ்ப்பாணம், பெப். 6

நாளை வெள்ளிக்கிழமை காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்குப் புறப்படும் கப்பலில் —

சிவில் நிர்வாக அலுவலகத்தில் கப்பல் பயணத்துக்குப் பதிவு செய்தவர்களில் இலக்கம் 188க்கும் 202க்கும், 409க்கும் 461க்கும் இடைப்பட்ட பட்டியல்களில் உள்ளவர்கள் பயணம் செய்யலாம் என்பதே சரியானதாகும்.

நேற்றைய உதயனில் இலக்கம் 188க்குப் பதிலாக 108 என்று தவறாகப் பிரசுரமாகி விட்டது.

கப்பலில் பயணம் செய்பவர்கள் நாளை காலை 7 மணிக்கு மத்திய கல்லூரி மைதானத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ)

### உள்ளூராட்சித் தேர்தல்

## கருத்துக்கணிப்புக்கு ஒரு வெள்ளோட்டம்!

அதிகாரப் பரவலாக்கல் யோசனை குறித்து அரசாங்கம் நடத்த உத்தேசித்துள்ள கருத்துக் கணிப்பின் வெள்ளோட்டமாகவே உள்ளூராட்சித் தேர்தலை அரசு நடத்துகின்றது என்று ''மிட்வீக் மிரர்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதிகாரப் பரவலாக்கல் யோசனை குறித்து அரசாங்கம் கருத்துக் கணிப்பை நடத்தவும், தீர்வு யோசனைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் முயற்சி எடுத்திருந்தது.

ஆனால் திடீரென உள்ளூராட்சித் தேர்தலை அரசு அறிவித்தது.

கருத்துக் கணிப்புக்கான வெள்ளோட்டமே இந்தத் தேர்தலாகும் — என்று அப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

(உ-3-150)

## புலமைப் பரிசில் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ். பல்கலைக்கழகத்துக்கு 1995/96 கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான மகாபொல உயர்கல்விப் புலமைப் பரிசில் பரிசளிப்பு வைபவம் நாளை மறுதினம் சனிக்கிழமை பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கிறது.

மகாபொல புலமைப் பரிசில் பெறத் தகுதியுடைய மாணவர்களை இந்த வைபவத்தில் கலந்து கொண்டு புலமைப் பரிசில் சான்றிதழ்களைப் பெறுமாறு யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் கேட்டுள்ளார்.

(உ-3-5-150)

## 2 படையினர் பலி?

யாழ்ப்பாணம், பெப். 9

மந்துவிலில் சைக்கிளில் ரோந்து வந்த இராணுவத்தினர் மீது கடந்த ஞாயிறன்று புலிகள் நடத்திய தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மற்றவர்கள் ஓடித்தப்பினர் என்று 'வெரித்தாஸ்' தெரிவித்தது.

# முல்லை., கிளிநொச்சியில் விமானக் குண்டு வீச்சுக்கள்!

கொழும்பு, பெப். 6

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் முகாம்கள் மீது கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் விமானக் குண்டு வீச்சுக்கள் இடம் பெற்றன என்று விமானப் படைத்தளபதி ஏயர் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி இரணைமடுத் தளத்தில் உள்ள 14 பேஸ் என்னும் தலைமையகமும் விமானப் படையின் தாக்குதலுக்கு உள்ளாகியது.

கிபிர், புக்காரா விமானங்கள் இத்தாக்குதலை மேற்கொண்டன.

வடக்கில் உள்ள இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்த புலிகள் திரள்வதாக புலனாய்வுத் தகவல் கிடைத்தது. இதை முடக்கவே விமானப்படை தாக்குதல் நடத்தியது — இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் — புதுக்குடியிருப்புப் பகுதியில் — மக்கள் நெருக்கமாக வாழும் பிரதேசத்தில் — புக்காரா விமானம் மூன்று றொக்கட்டுகளை ஏவியதாகக் கூறப்படுகின்றது.

பாடசாலைகள், சந்தைகள் மற்றும் அலுவலகங்கள் என்பன ஆரம்பிக்கப்பட்டு மக்கள் நிறைந்திருந்த வேளை இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. ஒரு கட்டடம் முழுமையாகச் சேதமாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ—5)

### கணேசலிங்கத்துக்கு ஆதரவு:

## பொ. ஐ. முவின் முரணான நிலை

கொழும்பு, பெப். 6

''ஐ. தே. கவில் ஊழல், முறைகேடு நடப்பதாகப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஒரு புறம் பிரசாரம் செய்கிறது. மறுபுறம் அந்த ஐ. தே. கவின் பொருளாளராக இருந்தவரை தமது ஆதரவுடன் மேயர் பதவிக்கு நிறுத்துகிறது.''

கொழும்பிலிருந்து வெளிவரும் ''மிட்வீக் மிரர்'' வார ஏட்டில் செய்தியின் பின் என்ற பகுதியில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழல், நளறுபடி என்று கூறும் ஐ தே. கவின் பொருளாளரை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தனது ஆதரவுடன் வேட்பாளராக நியமித்துள்ளது.

மனச்சாட்சி, நம்பகத்தன்மை என்பன கே. கணேசலிங்கத்தின் அசராதியில் இல்லை.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-150)

## கணேசலிங்கத்துக்கு தொடர்ந்து மேயர் அந்தஸ்து, வசதிகள்!

கொழும்பு, பெப். 6

உள்ளூராட்சிச் சபைகள் இந்த மாத முற்பகுதியில் கலைக்கப்பட்டதால் கொழும்பு மேயராகவிருந்த கே. கணேசலிங்கம் மேயர் பதவியை இழந்தபோதிலும், அவருக்கு வழங்கப்பட்ட வசதிகள் இன்னமும் வாபஸ் பெறப்படவில்லை என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவருக்கு வழங்கப்பட்ட உத்தியோகக் கார், கார் சாரதி உட்பட பொலீஸ் மற்றும் மாநகர சபை காவலர் பாதுகாப்பு, அமைச்சர் தரத்திலான பாதுகாப்பு ஆகியன வாபஸ் பெறப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

மேயர் பதவியை இழந்த பின்னரும் அவர் கொழும்பு நகர மேயர் அறையில் இருந்து ரூபவாஹினிக்கு பேட்டியளித்திருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் மேயரான கணேசலிங்கம் தற்போது அக்கட்சியிலிருந்து விலகி கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

(உ-3-150)

### நாளை

தை 25
வெள்ளிக்கிழமை

திதி: அமாவாசை
முன் இரவு 9.58 வரை.
நட்சத்திரம்: திருவோணம்
முன்இரவு 6.55 வரை.
அமாவாசை விரதம்
ராகுகாலம்: 11.05-12.35
சுபநேரம்: 6.35 - 8.05
[illegible]

### டரந்தன் தாக்குதல்;

## இந்திய அதிகாரி புலிகளுக்கு பாராட்டு

விடுதலைப்புலிகள் கடந்த மாதம் பரந்தனில் நடத்திய தாக்குதலை ஓய்வு பெற்ற இந்திய இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா வெகுவாகப் பாராட்டியுள்ளார் என 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' குறிப்பிட்டுள்ளது.

அப்பத்திரிகைக்கு அவர் வழங்கிய பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது,-

மிகவிரைவாகவும், திட்டமிட்டும், கணிப்புத்தவறாமலும், துணிவாகவும், தந்திரமாகவும் புலிகள் பரந்தனில் நடத்திக் காட்டிய வெற்றிகரமான தாக்குதல் உலகின் சிறந்த கெரில்லாத் தலைவர்களான சன் இட்கோ சேகுவாரா வழிவந்தோரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எதிர்பாராத வேளையில் எதிரியைக் குறிவைத்துத் தாக்கி திக்கு முக்காடச் செய்யும் தங்கள் திறமையைப் புலிகள் மீண்டும் நிலைநாட்டியுள்ளனர். இது போன்று தங்களைத் தாங்களே தியாகம் செய்யும் துணிவுகொண்ட கெரில்லாப்படை உலகத்தில் வேறெந்த நாட்டிலும் இல்லை.

ஆண்டுதோறும் வழக்கமாக சிங்கள ஆட்சியாளர்கள் செய்துவரும் வீண் சபதம் போலவே சந்திரிகாவும் இந்த ஆண்டு இறுதிக்குள் புலிகளை முற்றிலும் முறியடிக்கப் போவதாக பசப்பிக் கொண்டுள்ளார் — என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

(உ-5)

## பங்கீட்டு அட்டை, உணவுமுத்திரை பாதுகாப்புக்காகவே பொறுப்பேற்பு

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, பெப். 6

யாழ். மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டங்களுக்கு பிரயாணம் மேற்கொள்ளும் பயணிகளிடம் இருந்து அவர்களின் உணவு முத்திரையும், பங்கீட்டு அட்டையும்பொறுப்பேற்கப்படுவது பாதுகாப்புக் கருதியே.

மேற்கண்டவாறு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

புலிகள் இவற்றைப் பலவந்தமாகக் கைப்பற்றுவதை தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. அழிவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவர்கள் இவற்றைப் பயன்படுத்துகிறார்கள் என்பது தெரியவந்துள்ளது. — என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஷ்ய துணை பிரதமர் நியமனம்

மொஸ்கோ, பெப். 6

ரஷ்யாவின் உள்துறை அமைச்சர் அனற்ரோலி கியூலிக்கோ துணைப்பிரதமராக நேற்றுமுன்தினம் பதவியுயர்வு பெற்றார்.

ரஷ்யாவில் பெருகிவரும் சமூகவிரோதச் செயல்களைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர இவரது நியமனம் துணையாக நிற்கும் என அவதானிகள் கருதுகின்றனர்.

(ஐ-5)

## புலிகளுடன் . . ,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் ஜயரத்னா தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சார்பில் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு அமைச்சர் தொண்டமான் விருப்பம் தெரிவித்திருப்பது குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்து, இது விடயத்தை செயலாக்குவதற்குத் தாம் மேற்கொண்டு முயற்சி செய்யப்போவதாக அமைச்சர் ஜயரத்னா மேலும் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் ஜயரத்னா, ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

(அ)

## கண்டி . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருந்த வண. சரணங்கர தேரர் என்பவரே அந்தப் பிக்கு ஆவார்.

அரசாங்கம் முன் வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் தொடர்பாக அரசாங்கத்துக்கும் மகாசங்கத்தினருக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டிருப்பது தெரிந்ததே.

முக்கிய தேசிய வைபவம் ஒன்றில் மகாசங்கத்தினர் பங்குபற்றாமல் ஒதுங்கியுள்ளமை அரசுக்கும் மகாசங்கத்துக்கும் இடையில் நெருக்கடி மேலும் மோசமாவதையே காட்டுகிறது என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது. (உ—3—150)

## தரக்குறைவான . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தப் பெற்றோல் இறக்கப்பட்டு வந்ததாகவும் —

இறக்குமதியான பெற்றோல் தரம் குறைவானது எனக் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இறக்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளது எனவும் — தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பெற்றோலை கார் மற்றும் வாகனங்களுக்குப் பயன்படுத்தினால் அவற்றின் எஞ்சின் சேதமடையும்என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-3-150)


வாங்கி விட்டீர்களா?

லீலா

பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

யாழ். நகரில் மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள

போஸ்கோ

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி/75)

யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

AL/99

பொருளியல் அறிமுகம்

★ மாதாந்த பரீட்சையுடன்
★ முழுப்பாடத்திட்டமும் பூர்த்தியாக்கப்படும்
★ புதிய பாடத்திட்டத்திற்கமைவாகப் போதிக்கப்படும்.

குறிப்பு: அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன் கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

திரு. V. கருணாகரன் B. A.
(Hons Dip-in Ed.)

ஆரம்பம்: 09 - 02 - 97 Sat. 9-00 a. m.
நேரசூசி Sat. Sun. 9-00 — 10-30

[45130]

பராசக்தி

இல: 12, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

A/L 97, 98, 99

கலை புதிய வகுப்புக்கள்

ஆரம்பம் 8 - 2 - 97 காலை 9.00 மணி

நாடகமும் அரங்கியலும்

A/L 97 துரித மீட்டலும் சிங்கள அரங்கும்

தமிழ்: இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு

நாடகமும் அரங்கியலும்

A/L 98 எண்ணக்கருக்கள்

மற்றும் புவியியல், அரசியல் விஞ்ஞானம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களுக்கு உடன் பதிவு செய்யவும்.

(சி/74)


# வவுனியா தடுப்பு முகாம்களில் பெரும் நெருக்கடி நிலைமை

வன்னியின் ஏனைய பகுதிகளில் இருந்துஇடம்பெயர்ந்து அகதிகளாக வவுனியாவுக்குள் வந்த 12 ஆயிரத்து 276 பேர் பத்துத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் அந்த முகாம்களில் பெரும் இடநெருக்கடி காணப்படுகின்றது. இதனால் அகதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது.

முகாம்களில் மக்கள் நெருக்கியடித்துக் கொண்டு, கட்டுகளில் விறகு அடுக்கி வைக்கப்பட்டிருப்பது போன்று — ஒருவர் முகத்தில் மற்றையவர் மூச்சு விட்டுக் கொண்டு — தங்கியிருக்க வேண்டிய நிலையே காணப்படுகின்றது.

இந்த நெருக்கடி நிலையைச் சமாளிக்க அரச அதிகாரிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் பெரியளவில் பலன் தரவில்லை.

இந்த அகதிகளைத் தங்க வைப்பதற்காக பாடசாலைகளை மூடினால் கல்வி பாதிப்பு என குரல் எழுப்புகின்றது. மற்றைய புறத்தில் அகதிகளுக்குத் தங்க இடமில்லை.

முன்னர் சாதாரணமாக ஏனைய வன்னிப் பகுதிகளிலிருந்து ஒரு நாளைக்கு இருநூறு முதல் முந்நூறு பேர் வவுனியாவுக்குள் வந்தனர்.

இந்த எண்ணிக்கை கடந்த வாரத்தில் திடீரென ஐந்நூறு முதல் அறுநூறு என அதிகரித்தது.

அதேசமயம் திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே சேவையில் ஈடுபட்ட கப்பல்கள் பழுதடைந்ததால், வடக்கே கப்பலில் செல்வதற்காக வவுனியாவிலிருந்து திருகோணமலைக்கு இந்த அகதிகளை அனுப்பும் நடவடிக்கையும் தடைப்பட்டது.

இது தவிர, வவுனியா தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள அகதிகளில் தென்னிலங்கைக்குச் செல்வதற்கு நியாயமான — மிக முக்கியமான — காரணங்கள் உள்ளவர்கள் கூட பாதுகாப்புக் கெடுபிடிகளினால் தெற்கே செல்ல முடியாமல் உள்ளது.

இதனால் வவுனியா முகாம்களில் சிக்குண்டுள்ள அகதிகளின் நிலை பரிதாபத்திற்குரியதாக இருப்பதாகக் கூறப்படுகின்றது. (உ4)

## தேர்தலில் . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டும் என்று ஈ. பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் சொன்னார், (உ-150-3)

## வவுனியாவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையின் இலக்கு எது என்பது குறித்தோ, படைநகர்வு எத்தனை நாள்களுக்கு நீடிக்கும் என்பது குறித்தோ நேற்றிரவு வரை உத்தியோகபூர்வ தகவல்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

என்றாலும் —

நேற்று வரை படையினர் ஒன்பது கிலோ மீற்றர் தூரம் வரை முன்னேறியிருப்பதாகவும் —

புலிகளின் எதிர்ப்பு தீவிரமாக இருக்கவில்லை எனவும் —

புலிகளால் கைவிட்டுச் செல்லப்பட்ட இரு முகாம்களை படையினர் அழித்துள்ளனர் எனவும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

வவுனியாவிலிருந்து மன்னாருக்குப் போக்குவரத்துப் பாதையொன்றைத் திறக்கும் முயற்சியாகவோ —

அல்லது —

வவுனியா — கிளிநொச்சி பாதையைத் திறக்கும் முயற்சியின் ஒரு கட்டமாகவோ —

இந்தப் படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம் என சில செய்தி ஏஜென்ஸிகள் கருத்து வெளியிட்டன.

மன்னார் இராணுவத் தளம் மீது பாரிய அதிரடித் தாக்குதல் நடத்த புலிகள் திட்டமிட்டிருந்ததாக உளவுத்துறை அளித்த அறிக்கையின் அடிப்படையில் தான் இந்தப் படை நகர்வு மேற்கொள்ளப்படுகிறது என்று மற்றொரு செய்தி ஏஜென்ஸி குறிப்பிட்டது.

(உ-3-4-5-10)

## சுற்றிவந்து, .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

இராணுவம் வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கி நகர்ந்தால், ஓமந்தைக்குத் தெற்கில் இராணுவத்தின் நகர்வைத் தடுத்து. இராணுவத்திற்கு அதிக அழிவுகளை ஏற்படுத்தி, இராணுவ நடவடிக்கையை அந்த இடத்தில் நிறுத்துவதற்காகவே இந்தளவு நீளத்திற்குக் காப்பகழிகள் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுள்ளன.

இதனாலேயே இராணுவம் தனது திட்டத்தை மாற்றி, வவுனியாவிலிருந்து மேற்குத் திசையாக மன்னார் பக்கமாக சில மைல் தூரம் சென்று, அங்கிருந்து விடுதலைப் புலிகளின் காப்பகழித் தொடர்களுக்குப் பின்புறமாக வந்து — புலிகளைச் சுற்றி வந்து — தாக்கும் விதத்தில் தனது திட்டத்தை மாற்றியுள்ளது போல் தெரிகிறது.

இராணுவத்தால் இன்னும் இவ்வாறான தாக்குதல்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் அடுத்த நடவடிக்கைகள் எவை என்பதையும் இன்னும் சில நாள்கள் பொறுத்திருந்தே பார்க்கமுடியும் — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-10)

## தாய்லாந்து எல்லையில் மோதல்

பாங்கொக், பெப் 6

தாய்லாந்துக்கும் பர்மாவுக்கும் இடையிலான எல்லையில் கரன் தேசிய ஐக்கியப் புரட்சிக் குழுவின் படைகளுக்கும், அவர்களை எதிர்க்கும் பர்மிய அரசின் ஆதரவு ஜனநாயக கரன் பௌத்த இராணுவப் படைகளுக்கும் இடையே சண்டைகள் மூண்டுள்ளன.

ஜனநாயக கரன் பௌத்த போராளிகளையும், அவர்களை ஆதரிக்கும் பர்மிய இராணுவத்தையும் பர்மிய எல்லைக்கு வெளியே விரட்டிவிட்டதாக கரன் தேசிய ஐக்கியப் புரட்சிக் குழு தெரிவித்துள்ளது.

தனது நாட்டின் எல்லைகள் இப்படி அப்பட்டமாக அவமதிக்கப்படுவது குறித்து தாய்லாந்து அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. (உ-10)

## பூலான் தேவியை கைது செய்ய இந்தியா முழுவதும் தேடுதல்

புதுடில்லி, பெப். 6

மீண்டும் தலைமறைவாகியுள்ள இந்திய நாடாளுமன்ற சமாஜவாதிக்கட்சி உறுப்பினர் பூலான் தேவியைக் கைது செய்ய நாடு முழுவதும் தேடுதல் நடத்துமாறு இந்தியப் பொலீஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பூலான் தேவி மீதான பிணையில் விடமுடியாத கைது உத்தரவை ரத்துச் செய்ய கான்பூர் நீதிமன்றம் மறுத்ததை அடுத்து அவர் தலைமறைவாகியுள்ளார்.

பூலான் தேவியின் இரு வீடுகளிலும் அவரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து நாட்டில் அவரை எங்கு கண்டாலும் உடனடியாகக் கைது செய்யும்படி சகல மாவட்ட பொலீஸ் அதிகாரிகளுக்கும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

## மேலும் 47 இந்தியச் சிறுவரை சவூதி திருப்பி அனுப்பியது!

மணிலா, பெப். 6

சவூதி அரேபியாவில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த– ஏழு முதல் 13 வயது வரையுடைய— 47 இந்திய நாட்டுச் சிறுவர்களை சவூதி அரசு கடந்த திங்களன்று இந்தியாவுக்கு திருப்பி அனுப்பி வைத்தது.

கடந்த மாதமும் இது போன்ற 76 இந்தியச் சிறுவர்களை சவூதி அரசு இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பியிருந்தது.

தமது பிள்ளைகள், உறவினர்கள் என்று கூறி இந்தச் சிறுவர்களை சவூதிக்குக் கூட்டிச் செல்லும் சிலர் அங்கு அவர்களை பிச்சை எடுக்கும் தொழிலில் ஈடுபடுத்தி பணம் சம்பாதிக்க முயற்சித்தனர் என்று அப்போது தகவல்கள் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (உ-10)

## அணுக் கழிவுடன் சென்ற ரயில் விபத்து

பொன், பெப். 6

ஜேர்மனியிலிருந்து அணுக் கழிவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு பிரான்ஸிற்குச் சென்று கொண்டிருந்த ரயில் ஒன்று நேற்று முன்தினம் தடம்புரண்டது. எனினும் அணுக்கதிர்வுச் சிதைவுகள் எதுவும் இதனால் ஏற்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-5)

## வயோதிபர் மரணம்

இந்தியாவிலே அதிக வயதான மனிதர் எனக் கருதப்பட்ட ஜேசுதாஸன் என்பவர் தனது 120 ஆவது வயதில் நேற்று முன்தினம் மரணமடைந்தார். இவர் தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

இவர் தனது கல்லறையை 15 ஆண்டுகளுக்கு முன்தானே முன்னின்று கட்டி வைத்திருந்தார். அந்தக் கல்லறையில் அவர் நேற்று அடக்கம் செய்யப்பட்டார்.

## பாக். தேர்தல்

இஸ்லாமாபாத், பெப். 6

பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் நவாப் ஷெரீப் தலைமையிலான முஸ்லிம் லீக் பெரு வெற்றியீட்டி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் பெற்றது.

எனினும் சிந்து மாகாணத்துக்கான சட்டசபைத் தேர்தலில் அவரது கட்சிக்கு 11 இடங்களே கிடைத்தன.

பெனாஸீரின் கட்சிக்கு 33 இடங்களும் இந்தியாவிலிருந்து குடியேறியோரின் பிராந்தியக் கட்சிக்கு 28 இடங்களும் கிடைத்தன.

(உ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 06 - 02 - 1997 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org